பழங்குடியின மக்களின் வளர்ச்சிக்கு கல்வியே அடிப்படை

குடியரசுத் தலைவர்

கும்லா, டிச. 30: 'பழங்குடியின மக்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கு கல்வியே அடிப்படையானது'என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

ஜார்க்கண்ட் மாநிலம், கும்லா மாவட்டத்தில் நடைபெற்ற பழங்குடியின கலாசார விழாவில் பங்கேற்று அவர் ஆற்றிய உரை:

ஒரு சமூகத்தின் வளர்ச்சியைத் தீர்மானிப்பதில் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. கல்வி ஒருவரின் ஆளுமையை மேம்படுத்தி, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதுடன், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சமூக நீதிக்கும் வழிவகுக்கிறது.

பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் நவீன கல்வியைப் பெறுவதுடன், தங்களின் பாரம்பரிய அடையாளத்தையும் கலாசாரத்தையும் பாதுகாப்பதிலும் உறுதியாக இருக்க வேண்டும்.

படித்த இளைஞர்களில் பலர் நகரங்களிலேயே தங்கிவிடுகின்றனர். இளைஞர்கள் தாங்கள் பிறந்த கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள மக்களுக்கு அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அரசின் திட்டங்கள் கடைக்கோடி மனிதரையும் சென்றடையும்போதுதான் முழுமையான வெற்றி கிடைக்கும்.

பழங்குடியின மக்களின் நலனுக்காகவும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்காகவும் மத்திய அரசு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. பிர்சா முண்டா பெயரில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், அடிப்படை வசதிகள் அற்ற மக்களுக்கு வீடு, குடிநீர், சாலை மற்றும் கல்வி வசதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன என்றார்.

ஜார்க்கண்ட் ஆளுநர் சந்தோஷ் குமார் கங்வார், சத்தீஸ்கர் ஆளுநர் ரமண் தேகா ஆகியோரும் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியில் சத்தீஸ்கர் மாநில முதல்வர் விஷ்ணுதேவ் சாய் பேசுகையில், 'சத்தீஸ்கரில் நக்ஸல் ஒழிப்பு நடவடிக்கை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. சுமார் 400-க்கும் மேற்பட்ட கிராமங்கள் நக்ஸல் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, தற்போது வளர்ச்சிப் பாதையில் பயணித்து வருகின்றன' என்று குறிப்பிட்டார்.

முன்னதாக, ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் மற்றும் அவரது மனைவியும் எம்எல்ஏவுமான கல்பனா சோரன், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை மரியாதை நிமித்தமாக சந்தித்தனர். ஜார்க்கண்டில் மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்டு குடியரசுத் தலைவர் செவ்வாய்க்கிழமை பிற்பகலில் புது தில்லி புறப்பட்டார்.

உத்தரகண்ட்: பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்து 7 பேர் உயிரிழப்பு

12 பேர் காயம்

டேராடூன், டிச. 30: உத்தரகண்டின் அல்மோரா மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். 12 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் கூறியதாவது: நைனிடாலில் உள்ள ராம்நகரில் இருந்து அல்மோராவின் துவாராஹட் பகுதிக்கு சுமார் 20 பயணிகளுடன் ஒரு பேருந்து சென்று கொண்டிருந்தது. பிகியாசின் பகுதியில் சென்றபோது, திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, சாலையோரப் பள்ளத்தில் கவிழ்ந்து உருண்டது.

இந்த விபத்தைத் தொடர்ந்து, காவல் துறையினர், மாநில பேரிடர் மீட்புப் படையினர் விரைந்து, மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்ட நிலையில், ஒருவர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் இறந்தார். காயங்களுடன் மீட்கப்பட்ட மேலும் 12 பேர், அருகிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்து தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெறுகிறது என்று காவல் துறையினர் தெரிவித்தனர்.

பிரதமர் இரங்கல்: பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'உத்தரகண்டின் அல்மோராவில் சாலை விபத்தில் நேரிட்ட உயிரிழப்புகள் வேதனையளிக்கிறது. தங்களின் அன்புக்குரியவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்கள். காயமடைந்தோர் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

உத்தரகண்ட் மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமியும் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார். காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சையை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

ஆன்மிகம், சமூக வாழ்க்கையைப் பிரிக்க முடியாது

குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன்

வர்கலா, டிச. 30: ஆன்மிகத்தையும் சமூக வாழ்வையும் பிரித்துப் பார்க்க முடியாது என குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் சமூக சீர்திருத்தவாதி ஸ்ரீ நாராயண குரு நிறுவிய சிவகிரி மடத்தில் 93-ஆவது சிவகிரி யாத்திரை நிகழ்வை சி.பி.ராதாகிருஷ்ணன் செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்து அவர் பேசியதாவது:

ஆன்மிக வாழ்வையும், சமூக வாழ்வையும் பிரித்துப் பார்க்க முடியாது. ஒரு மதத்தின் மீதான நம்பிக்கை சமூகத்தை முன்னேற்ற வில்லைஎன்றால், அந்தநம்பிக்கை முழுமை பெறாது. நல்லிணக்கத்துக்குச் சிறந்த உதாரணமாக சிவகிரி யாத்திரை திகழ்கிறது.

நாட்டில் பக்தி சுற்றுலா வளர்ச்சியடைந்து வருகிறது. இது வெறும் பயணமாக மட்டுமல்லாமல் சிறந்த ஆன்மிக அனுபவமாக மாறியுள்ளது. ஹஜ் பயணம் எளிமையாகியுள்ளது. பௌத்த வழிபாட்டுத் தலங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

முக்கிய புனிதத் தலங்களுக்கு வந்தே பாரத் ரயில் இயக்கப்படுகிறது. பிரசாத் திட்டம் மூலம் ஆன்மிக சுற்றுலா நவீனப்படுத்தப்பட்டுள்ளது. அயோத்தி முதல் ராமேசுவரம் வரை இந்தப் பயணங்கள் மக்களை இணைக்கின்றன. இதனால் வாழ்வாதாரம், சமூக நல்லிணக்கம் மேம்படுவதோடு சமூகத்தில் ஒற்றுமை வலுப்படுகிறது.

சமூக ஊடகத்தால் கவனச்சிதறல்: சமூக வலைதளங்களின் ஆதிக்கத்தால் இளம் தலைமுறையினர் தடம் மாறும் சம்பவங்களைத் தடுக்க வேண்டியது அவசியம். குறுக்கு வழியில் விரைவாக அடையும் முன்னேற்றமே அவர்களை ஈர்க்கிறது.

போதைப் பொருள் புழக்கம் மற்றும் தவறான முன்னுதாரணங்கள் நம்மை கவலையடையச் செய்கிறது.

வழிகாட்டி நாராயண குரு: இதுபோன்ற சூழலில் ஸ்ரீ நாராயண குருவின் பங்களிப்பை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர் வன்முறைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர். தேசத்தைக் கட்டமைக்க கடந்த காலத்தில் மட்டுமன்றி எதிர்காலத்திலும் இளைஞர்களுக்கு நல்வழிகாட்டியாகத் திகழக்கூடியவர்.

இளைஞர்களே இந்தியாவின் எதிர்காலம்

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள மார் இவானியோஸ் கல்லூரி விழாவில் பங்கேற்க வந்த குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனுடன் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர், முதல்வர் பினராயி விஜயன்.

திருவனந்தபுரத்தில் உள்ள மார் இவானியோஸ் கல்லூரியின் 75-ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சிகளை செவ்வாய்க்கிழமை தொடங்கிவைத்து சி.பி.ராதாகிருஷ்ணன் பேசுகையில், 'அரசமைப்புச் சட்டம் நமக்கு அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளது. அதேவேளையில் வேற்றுமைக்கு மரியாதை, அறிவியல் மனப்பான்மை ஊக்குவிப்பு, இந்திய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துதல் உள்ளிட்ட அடிப்படைக் கடமைகளையும் நாம் மறந்துவிடக் கூடாது.

ஜனநாயகத்தின் சிறப்பான செயல்பாட்டுக்கு குடிமக்கள் இந்தக் கடமைகளை வழிகாட்டியாக கொண்டு செயல்பட வேண்டும்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை அதிகாரத்தால் மட்டுமே கட்டமைக்க முடியாது.

நாட்டின் எதிர்காலமான இளைஞர்கள் பயிலும் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள், வேளாண் நிலம், தொழிற்சாலைகள், கிராமங்கள் என அனைவரின் பங்களிப்போடு மட்டுமே இதை சாத்தியப்படுத்த முடியும்' என்றார்.

இந்த நிகழ்ச்சியில் கேரள ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர், முதல்வர் பினராயி விஜயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அவரால் நிறுவப்பட்ட இந்த மடத்தில் மேற்கொள்ளப்படும் யாத்திரைக்கு ஜாதி, சமூகத்தைக் கடந்து மக்கள் ஒன்றிணைந்துள்ளனர். அவரைப் பின்பற்றி அரசமைப்புச் சட்டத்தின்படி சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் நீதிக் கொள்கைகளை இளைஞர்கள் நிலைநிறுத்த வேண்டும் என்றார்.

கர்நாடகத்தில் முஸ்லிம்களின் ஆக்கிரமிப்பு வீடுகள் இடிப்பு: பாகிஸ்தான் கருத்துக்கு பாஜக கண்டனம்

பெங்களூரு, டிச. 30: கர்நாடகத்தில் ஆக்கிரமிப்பு நிலத்தில் கட்டப்பட்டிருந்த முஸ்லிம்களின் வீடுகள் இடிப்பு விவகாரம் தொடர்பாக, பாகிஸ்தான் கருத்துக்கு பாஜக கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

பெங்களூரில் கோகிலே லேஅவுட் பகுதியில் அரசுக்கு சொந்தமான 5 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்து முஸ்லிம்கள் உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்டோர் கட்டியிருந்த வீடுகளை கடந்த வாரம் கிரேட்டர் பெங்களூரு ஆணையத்தின் அதிகாரிகள் இடித்து அகற்றினர்.

இதை கேரள முதல்வர் பினராயி விஜயன் விமர்சித்திருந்தார். இதை ஏற்காத துணை முதல்வர் டி.கே.சிவகுமார், 'ஆக்கிரமிப்பு நிலத்தை மீட்டுள்ளோம். கர்நாடக விவகாரத்தில் பினராயி விஜயன் தலையிட வேண்டிய அவசியமில்லை' என்று தெரிவித்திருந்தார்.

முதல்வர் சித்தராமையா, 'சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தை மீட்டிருக்கிறோம். மாற்று வீட்டுவசதியை ஏற்படுத்தித் தரும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்' என்று தெரிவித்திருந்தார்.

கோகிலே லேஅவுட் இடத்தை துணை முதல்வர் டி.கே.சிவகுமார் நேரடியாக பார்வையிட்டு குறைகளைக் கேட்டறிந்தார். இந்நிலையில், முதல்வர் சித்த ராமையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், கோகிலே லேஅவுட் பகுதியில் வீடிழந்தவர்களுக்கு பையப்பனஹள்ளியில் அடுக்குமாடி குடியிருப்பில் வீடு ஒதுக்க முடிவு செய்யப்பட்டது.

இதனிடையே, கோகிலே லேஅவுட் பகுதியில் முஸ்லிம்களின் வீடுகள் இடிக்கப்பட்டது தொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவுத் துறை கருத்து தெரிவித்துள்ளது. இதற்கு இந்திய வெளியுறவுத் துறை பதிலடி கொடுத்துள்ளது.

கோகிலே லேஅவுட் பகுதியில் முஸ்லிம்களின் வீடுகள் இடிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாகிஸ்தான் கருத்து தெரிவித்துள்ளதை, கர்நாடக பாஜக கடுமையாக கண்டித்துள்ளது.

பாஜகவின் மூத்த தலைவரும், மத்திய இணை அமைச்சருமான ஷோபா கரந்தலஜே கூறுகையில், 'கோகிலே லேஅவுட் பகுதியில் ஆக்கிரமிப்பு வீடுகள் இடிக்கப்பட்டதற்கு பாகிஸ்தான் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது பல கருத்துகளுக்கு வழிவகுத்துள்ளது. அப்படியானால், பாகிஸ்தான் கருத்துடன் காங்கிரஸ் ஒத்துப்போகிறதா?' என கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவர் ஆர். அசோக் கூறுகையில், 'ஆக்கிரமிப்பு நிலத்தில் சட்டவிரோதமாக வீடு கட்டியிருந்தவர்களுக்கு மாற்றுவீடு ஒதுக்கியிருப்பதன் மூலம் மினி பாகிஸ்தானை அமைக்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தான் மக்களிடம் பணம் பெற்றுக்கொண்டு வீட்டுமனை கொடுத்துள்ளார். கேரளத்தைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கு காங்கிரஸ் சலுகை காட்டுவது ஏன்?' என்றார்.

சபரிமலை தங்கக் கவச முறைகேடு: மார்க்சிஸ்ட் எம்எல்ஏவிடம் விசாரணை

திருவனந்தபுரம், டிச. 30: சபரிமலை தங்கக் கவச முறைகேடு விவகாரம் தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்எல்ஏ கடகம்பள்ளி சுரேந்திரனிடம் சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) விசாரணை நடத்தியதாக காவல் துறை வட்டாரங்கள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தன.

சபரிமலை தங்கக் கவச முறைகேடு நடைபெற்ற சமயத்தில் தேவஸ்வம் அமைச்சராக இருந்த கடகம்பள்ளி சுரேந்திரன் தன்னிடம் கடந்த வாரம் எஸ்ஐடி வாக்குமூலம் பெற்றதை உறுதிப்படுத்தினார்.

முன்னதாக, இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள தொழிலதிபர் உண்ணிகிருஷ்ணன் போற்றியுடன் கடகம்பள்ளி சுரேந்திரன் இருப்பது போன்ற புகைப்படத்தை புரட்சிகர சோஷலிஸ கட்சியைச் சேர்ந்த ஷிபு ஜான் பேபி என்பவர் வெளியிட்டார். இதைத்தொடர்ந்து,கடகம்பள்ளி சுரேந்திரனிடம் விசாரணை நடத்தப்பட்டதாக காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரிய முன்னாள் தலைவர் என். பிரசாந்திடமும் எஸ்ஐடி விசாரணை நடத்தியதாகத் தகவல்கள் வெளியாகின.

கடந்த 2019-இல் சபரிமலை ஐயப்பன் கோயிலின் கருவறைக் கதவுகள் மற்றும் துவார பாலகர் சிலைகளின் தங்கக் கவசங்கள் புதுப்பிக்கப்பட்ட பிறகு, அவற்றின் எடை குறைந்ததாகப் புகார் எழுந்தது. இது தொடர்பான வழக்கில், விசாரணை மேற்கொள்ள கேரள உயர்நீதிமன்ற வழிகாட்டுதலில்எஸ்ஐடி அமைக்கப்பட்டது.

இதையடுத்து,தங்கக் கவசபுதுப்பிப்புப் பணிக்கான செலவை ஏற்ற பெங்களூரு தொழிலதிபர் உண்ணிகிருஷ்ணன் போற்றி, திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரிய முன்னாள் தலைவர்களும்மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களுமான என்.வாசு, ஏ.பத்மகுமார், மற்றும் தேவஸ்வம் உறுப்பினர் என்.விஜயகுமார், கர்நாடக மாநிலம், பெல்லாரியில் உள்ள நகைக் கடை அதிபர் கோவர்தன் உள்பட 10 பேரை எஸ்ஐடி கைது செய்து விசாரித்து வருகிறது.

எச்.ஏ.எல். தயாரித்துள்ள அடுத்த தலைமுறை பயணிகள் ஹெலிகாப்டர்

முதல் பயணத்தை தொடங்கி வைத்தார் மத்திய அமைச்சர் ராம்மோகன் நாயுடு

பெங்களூரு, டிச. 30: எச்.ஏ.எல் தயாரித்துள்ள அடுத்த தலைமுறை பயணிகள் ஹெலிகாப்டரான 'துருவ் என்.ஜி.'-இன் முதல் பயணத்தை மத்திய அமைச்சர் ராம்மோகன் நாயுடு செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்தார்.

மத்திய பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் பெங்களூரைச் சேர்ந்த ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிகல் நிறுவனம் (எச்.ஏ.எல்.) உள்நாட்டு தொழில்நுட்பத்தில் வடிவமைத்து தயாரித்துள்ள 'துருவ் என்.ஜி.' ஹெலிகாப்டரின் முதல் பயணத்தை செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விழாவில், மத்திய விமானத் துறை அமைச்சர் ராம்மோகன் நாயுடு தொடங்கி வைத்தார்.

துருவ் என்ஜி ஹெலிகாப்டர் பயன்பாட்டை செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்த மத்திய அமைச்சர் ராம்மோகன் நாயுடு.

பயணிகள் சந்தையின் தேவை களை நிறைவு செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள துருவ் என்.ஜி. ஹெலிகாப்டர், அதிநவீன தொழில் நுட்பங்களுடன் தயாரிக்கப் பட்டுள்ளது. 5.5 டன் எடை கொண்ட இந்த ஹெலிகாப்டரில் இரட்டை என்ஜின்கள் உள்ளன. மாறுபட்ட நில மற்றும் தட்பவெப்ப சூழல்களுக்கு பயன்படுத்திக்கொள்ளும் வகையில், சுழன்றடிக்கும் திறனுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. 5,500 டன் எடை கொண்ட பளுவை தூக்கும் திறன்கொண்ட ஹெலிகாப்டர், அதிகபட்சமாக மணிக்கு 285 கி.மீ. வேகத்தில் பயணிக்கக் கூடியது.

இதன்மூலம், 630 கி.மீ. தொலைவை 3 மணிநேரத்தில் அடைய முடியும். மேலும், 6 ஆயிரம் மீட்டர் உயரம் பறக்கும் திறன்கொண்டது.

ஒரு நேரத்தில் 14 பேர் பயணிக்கலாம். விமான ஆம்புலன்ஸ் ஆகவும் பயன்படுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. பேரிடர் காலங்களில் மக்களை மீட்கவும் பயன்படும் என எச்.ஏ.எல். அதிகாரிகள் தெரிவித்தனர்.

மும்பையில் பின்னோக்கி இயக்கப்பட்ட பேருந்து மோதி 4 பேர் உயிரிழப்பு; 9 பேர் காயம்

மும்பை, டிச. 30: மகாராஷ்டிர தலைநகர் மும்பையில் பேருந்தைப் பின்னோக்கி (ரிவர்ஸ்) இயக்கியபோது பாதசாரிகள் மீது மோதியதில் 3 பெண்கள் உள்பட 4 பேர் உயிரிழந்தனர்; மேலும் 9 பேர் காயமடைந்தனர்.

மும்பை புறநகரான பாண்டுப் மேற்கு பேருந்து நிலையத்தை டுத்துள்ள பரபரப்பான ரயில் நிலையச் சாலையில் திங்கள்கிழமை இரவு 10 மணியளவில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

இது தொடர்பாக காவல் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: சம்பந்தப்பட்ட சிறிய ரக பேருந்து, மும்பை மாநகராட்சியின் மின்விநியோக மற்றும் போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் (பெஸ்ட்) ஒப்பந்த அடிப்படையில் இயக்கப்படுவதாகும்.

இந்தப் பேருந்து, ஓலெக்ட்ரா கீரீன்டெக் நிறுவனத்துக்குச் சொந்தமானது.

பாண்டுப் (மேற்கு) ரயில் நிலையத்துக்கு வெளியே பரபரப்பான சாலையில் இந்தப் பேருந்தை ஓட்டுநர் சந்தோஷ் ரமேஷ் சாவந்த் (52) பின்னோக்கி இயக்கியபோது பாதசாரிகள் மீது மோதியது.

பேருந்து மோதிய வேகத்தில் சிலர் தூக்கிவீசப்பட்டனர். சிலர் பேருந்துக்கு அடியில் சிக்கினர். இந்த கோர விபத்தில் 3 பெண்கள் உள்பட 4 பேர் உயிரிழந்தனர். 9 பேர் காயமடைந்தனர்.

ஓட்டுநர் சந்தோஷ் ரமேஷ் சாவந்த்,பெஸ்ட் நிறுவன ஊழியர் ஆவார். அவருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரை காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதமர், முதல்வர் இரங்கல்: மும்பையில் பேருந்து மோதி 4 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி, முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸ் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். இது, மிகவும் துரதிருஷ்டவசமான சம்பவம் என்று குறிப்பிட்ட முதல்வர் ஃபட்னவீஸ், உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சம் நிவாரண நிதி அறிவித்துள்ளார்.

வங்கதேசம்: இந்திய தூதரை அவசரமாக அழைத்து ஆலோசனை

டாக்கா, டிச.30: வங்கதேசத்துக்கான இந்திய தூதரை அந்நாட்டு இடைக்கால அரசின் ஆலோசகர்கள் அவசரமாக அழைத்து பல்வேறு விவகாரங்கள் குறித்து செவ்வாய்க்கிழமை ஆலோசித்தனர்.

வங்கதேசத்தில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ந்தது முதல், அந்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், அந்நாட்டுக்கான இந்திய தூதர் ரியாஸ் ஹமீதுல்லாவுக்கு விடுக்கப்பட்ட அவசர அழைப்பின்பேரில், தலைநகர் டாக்காவில் அவர் வங்கதேச வெளியுறவுத் துறை ஆலோசகர் முகமது தௌஹீத் ஹுசேன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கலீலுர் ரெஹமான் ஆகியோரை செவ்வாய்க்கிழமை சந்தித்ததாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய தூதரை அவ்வப்போது அழைத்து ஆலோசனை நடத்துவதாகவும், தற்போதைய சந்திப்பில் பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசப்பட்டதாகவும் தௌஹீத் ஹுசேன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். ஆனால் எந்தெந்த விவகாரங்கள் குறித்து பேசப்பட்டது என்ற தெளிவான தகவலை அவர் வெளியிடவில்லை.

இந்தச் சந்திப்பு சுமார் அரை மணி நேரம் நீடித்ததாக அந்நாட்டு ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டது.

வங்கதேச மத அடிப்படைவாத அமைப்புகளுடன் தொடர்பு: அஸ்ஸாம், திரிபுராவில் 11 பேர் கைது

குவாஹாட்டி, டிச.30: வங்கதேச மத அடிப்படைவாத அமைப்புகளுடன் தொடர்புடைய 11 பேர் அஸ்ஸாம், திரிபுராவில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் வடகிழக்கு மாநிலங்களில் வன்முறை ஏற்படுத்தும் சதியில் ஈடுபட்டிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வங்கதேசத்தில் பிரதமர் ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ப்புக்குப் பிறகு அங்குள்ள ஹிந்துக்கள் மீது தாக்குதல், ஹிந்துக்களின் வீடுகளுக்கு தீ வைப்பது போன்ற நிகழ்வுகள் தொடர்கின்றன.

மேலும், வங்கதேச வரைபடத்துடன் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்த்து வெளியிடுவது, அந்த மாநிலங்களைக் கைப்பற்றப் போவதாகப் பேசுவது போன்றவற்றிலும் வங்கதேசத்தில் உள்ள சில அமைப்பினர் ஈடுபட்டனர்.இதையடுத்து, மேற்கு வங்கம், வடகிழக்கு மாநிலங்களை ஒட்டிய வங்கதேச எல்லையில் கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன. இந்நிலையில் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குவாஹாட்டி காவல்துறை ஆணையர் பார்த்தசாரதி மஹந்தா கூறுகையில், 'மத்திய உளவு அமைப்புகள் அளித்த தகவலின்படி சிறப்புப் படை அமைக்கப்பட்டு 11 பேரை பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அஸ்ஸாமில் 4 மாவட்டங்களிலும், திரிபுராவிலும் திங்கள்கிழமை இரவு ஒரே நேரத்தில் தேடுதல் பணி மேற்கொள்ளப்பட்டு 11 பேரும் அதிரடியாக கைது செய்யப்பட்டனர். வங்கதேச மத அடிப்படைவாத அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வந்த இவர்கள், அங்கிருந்து வரும் உத்தரவுகளை செயல்படுத்தி வந்தனர்.

அஸ்ஸாம், வடகிழக்கு மாநிலங்களில் சமூக அமைதியை சீர்குலைப்பது, இஸ்லாமிய ஆதிக்கத்தை உருவாக்குவது இவர்களின் நோக்கம்.

நசீம் உதீன் என்ற நஜ்முதீன் தமீம் (24), ஜுனாப் அலி (38), அம்ப்ராஹிம் ஹுசைன் (24), மிசானூர் ரஹ்மான்(46), சுல்தான் மெஹ்மூத் (40) முகமது சித்திக்கி அலி (46), ரசிதுல் ஆலம் (28), மஹிபுல் கான் (25), ஷாரூக் ஹுசைன் (22), முகமது தில்பர் ரசாக் (26) ஆகிய 10 பேர் அஸ்ஸாமிலும், ஜாகிர் மியா (33) என்பவர் திரிபுராவிலும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இணைந்துள்ள இமாம் மஹ்மூதர் கலீஃபா அடிப்படைவாத அமைப்புக்கும் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ள ஜமாத்-உல்-முஜாஹிதீன் வங்கதேசம் என்ற பயங்கரவாத அமைப்புக்கும் தொடர்பு உள்ளது.

இந்த அமைப்பினர் இந்தியாவில் இருந்தும் நிதி திரட்டியுள்ளனர். வங்கதேச பயங்கரவாத அமைப்பினர் தங்கள் நாட்டில் பயன்படுத்தியபோன்ற வெடிகுண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் போன்றவை அண்மையில் அஸ்ஸாமிலும் கைப்பற்றப்பட்டன. இதன் மூலம் அவர்களுக்கு இங்குள்ள தொடர்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன என்றார்.

பிரமல் ஃபைனான்ஸ் லிட்.

CIN : L65910MH1984PLC032639

பதிவு அலுவலகம்: யூனிட் எண் 601,6-ஆவது தளம், பிரமல் அமித் பிஸ்டிங், பிரமல் அகஸ்தியா கார்ப்பரேட் பார்க், கமணி ஜங்ஷன், தீயணைப்பு நிலையம் எதிரில், LBS மார்க், குர்லா(மேற்கு) மும்பை-400070 / தொபே: +91 22 3802 4000

கிளை அலுவலகம்: கல்பவ்திக்கா டவர்ஸ்', ஒன்றாவது தளம், புதிய எண்: 36, பழைய எண் 24, டாக்டர் அம்பேத்கர் சாலை, அசோக் நகர் பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை-600 024

தொடர்பு நபர்: 1. சுரேஷ் N-9094021997, 2.விஜய் தேவராஜ்-9843833009, 3. சந்தன் சக்கல்கர்- 9820407168

E-ஏல விற்பனை அறிவிப்பு- முதல் விற்பனை

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை நெருக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டத்தின் கீழ், கடன்தாரர்களிடமிருந்து வர வேண்டிய கடன் பாக்கியை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனுக்கு ஈடான அடமான சொத்துகள், பிரமல் ஃபைனான்ஸ் லிட்.-ன் (முன்னர் பிரமல் கேப்பிடல் & ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்) அதிகாரபூர்வ அலுவலரால் சுவாதீனத்தில் (POSSESSION) எடுத்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, கீழே விவரிக்கப்பட்டுள்ள சுவாதீனத்தில் (POSSESSION) உள்ள அசையா சொத்துக்கள் **"உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளது உள்ளவாறு, உள்ளதெல்லாம் உள்ளவாறு"** எனும் அடிப்படையில் விற்பனை செய்வதற்காக விலைப்புள்ளிகள் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் வரவேற்கப்படுகின்றன. இதுப்பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

கடன் குறிமிடு / கிளை / கடன்தாரர்கள்/ கூட்டுக்கடன்தாரர்கள் / ஜாமின்தாரர்கள்:	கேட்பு அறிவிப்புத் தேதி & தொகை	அசையா சொத்து விவரம் முகவரி_இறுதி:	ரிசர்வ் விலை	EMD தொகை. (RP யில் 10%)	மொத்த கடன் பாக்கி (27.12.2025)
கடன் குறிமிடு எண். BLSA00021F29, புதுச்சேரி (கிளை), பாலசென்னம்மா P (கடன்தாரர்), N போலையா (கூட்டுக் கடன்தாரர் 1)	தேதி:11-08-2025, ரூ.20,33,336/- (ரூபாய் இருபது லட்சத்து முப்பத்து மூவாயிரத்து முந்நூற்று முப்பத்து ஆறு மட்டும்)	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பரப்பளவு அமைவிடம் புதுச்சேரி பதிவு மாவட்டம், திருக்கனூர் துணைப் பதிவு மாவட்டம், மண்ணாடிப்பட்டு கொம்யூன் ஊராட்சி, கிராம எண்.8, திருபுவனை வருவாய் கிராமம், ழுனிவாச நகர், RS.எண்.56/1 Cad. எண்கள்.315, 317, 316/1/2, 316/2/2/2/1, 316/2/2/2/1, 318/2, 314 Pt அதில் மனை எண்.108, அளவு :தெற்கில் கிழக்கு-மேற்காக 46 அடி, வடக்கில் 40 அடி, மேற்கில் வடக்கு-தெற்காக 28 அடி, கிழக்கில் 39 அடி, மொத்தப் பரப்பளவு 1340 சதுர அடி. எல்லைகள் :- வடக்கு- 2வது குறுக்குத் தெரு தெற்கு- மனை எண்.109 கிழக்கு :-மனை எண்.107 மேற்கு:- புதிதாக அமைக்கப்பட்ட தெரு.	ரூ.18,70,000/-